# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.283/2015

பி.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி– நாள் 19–01–2026.

பெயர் = ராமசாமி பி.சா.–1

பி.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.தொடர்ச்சி–

(1) தாவாச்சொத்தில் திருமணமண்டபம் கட்டுவதற்கு அங்கீகார வரைபடம் வாங்கினோமா என்றால் எனக்குத் தெரியாது. திருமணமண்டபம் கட்டுவதற்காக பஞ்சாயத்துபோர்டில் அனுமதி வாங்கினோமா என்றால் தெரியாது. நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி வாங்காமல் சட்டவிரோதமாக கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் திருமணமண்டபம் கட்டவில்லை நூலகம், முதியோர் படிப்பகம் தான் கட்டியுள்ளதாக சாட்சி கூறுகிறார். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் பக்கம் 5ல் பாரா–11ல் திருமணமண்டபத்திற்காக வேண்டி 10 அடி ஆழத்திற்கு மேல் குழிகள் தோண்டி அதில் கான்கிரீட் பில்லர்கள் அமைத்து திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் நூலகம், முதியோர் படிப்பகம் கட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 06.07.1949ல் எங்கள் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை விவசாயிகள் களமாக பயன்படுத்த வாங்கப்பட்டது என்றால் சரிதான் முன்னோர்கள் அவ்வாறு வாங்கியுள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். கிரையம் வாங்கியதிலிருந்து எத்தனை வருடம் களமாக பயன்படுத்தினார்கள் என்று எனக்குத் தெரியாது முன்னோர்கள் பயன்படுத்தினார்கள் என சாட்சி கூறுகிறார். நிரூபணவாக்குமூலத்தில் 20 ஆண்டுகளாக தாவாச்சொத்தை களமாக பயன்படுத்தவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 20 வருடங்களாக பயன்படுத்தவில்லை என சொல்லியுள்ளேன் என சாட்சி கூறுகிறார்.

(2) எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களில் நிறையபேர் விவசாயம் செய்பவர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். உளுந்து, கம்பு, கேழ்வரகு முதலிய பயிர்களை களத்தில் வைத்துதான் அடித்து தானியத்தை பிரித்து

எடுப்பார்கள் என்றால் தற்போது களத்திற்கு வராது விவசாயம் செய்கிற இடத்தில் வைத்தே கருவி மூலம் பிரித்து எடுத்துக்கொள்கிறார்கள் என சாட்சி கூறுகிறார். களத்தின் பயன்பாடு மாற்றப்பட்டதால் நெடுஞ்சாலையில் விவசாயிகள் அனைவரும் தானியத்தை பிரித்தெடுக்க பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல நூதனகருவிகள் மூலமே பிரித்தெடுக்கிறார்கள் என சாட்சி கூறுகிறார். ஈரப்பதமாக உள்ள தானியங்களை களத்தில் காயவைப்பார்கள் என்றால் சரியல்ல. காய்ந்தபிறகு தான் தானியங்களை அறுவடை செய்கிறார்கள் என சாட்சி கூறுகிறார். களமாக பயன்படுத்தப்பட்ட இடத்தை கட்டிடம் கட்டுவதற்கு தீர்மானம் போட்டுள்ளோமா என்றால் ஆமாம் தீர்மானம் போட்டு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஒப்புதல்கொடுத்து தலைக்கட்டு வரி ரூபாய் 1000 கொடுத்துள்ளார்கள் இந்த வழக்கின் வாதிகளும் கொடுத்துள்ளார் என சாட்சி கூறுகிறார். வாதிகள் சீனிவாசன், சுந்தர்ராஜன் இருவரும் வரி கொடுத்துள்ளார்கள் என்பதற்கு ரசீது அடிக்கட்டு உள்ளதா என்றால் ரசீது போடவில்லை List எழுதி வைத்துள்ளோம் என சாட்சி கூறுகிறார்.

(3) வரி கொடுத்தவர்களிடம் அந்த List ல் கையொப்பம் பெற்றுள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கிற்காக மேற்படி List ஐ உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேலே வசூல் செய்ததாக சொல்லியுள்ள பணத்தை வங்கியில் செலுத்தினோமா என்றால் இல்லை. சமீபத்தில் நான் சொந்தமாக வீடு கட்டினோமா என்றால் இல்லை என் மகன் கட்டியுள்ளார். 20 லட்சம் ரூபாய் செலவழித்து என் மகன் வீடுகட்டியுள்ளார். ஊர்காரர்களிடம் வசூல் செய்த தொகையை வைத்து வீடு கட்டியதாக ஊர்காரர்கள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. என் மகன் ராணுவத்தில் இருக்கிறார் அவருடைய வருமானத்தை வைத்துதான் வீடு கட்டியுள்ளார். தாவாச்சொத்தை ஒரு பத்திரம் மூலமாக வாங்கினோமா என்றால் ஆமாம் 1949 வருட பத்திரம் மூலம் வாங்கினோம். பி.சா.ஆ.5 ஆவணத்தில் களம் வைத்து அடிக்கும் உபயோகித்திற்காக வாங்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ற்கு விரோதமாக தாவாச்சொத்தை வேறுவகைக்கு பயன்படுத்துவது சட்டவிரோமானது என்றால் சரியல்ல. கல்யாணமண்டபம் சம்பந்தமாக கலெக்டர், தாசில்தான், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரல் மீது நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். கல்யாண மண்டபத்தின் சாவி அரசாங்கத்திடம் உள்ளது அதனை திரும்ப ஒப்படைக்க சொல்லி மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

(4) தாவாச்சொத்தை வழக்கு தாக்கல் செய்ததேதிவரை களமாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. காலியிடமாக இருந்தது என சாட்சி கூறுகிறார். அந்த காலத்தில் காலியிடத்தில்தான் களமாக பயன்படுத்துவார்கள் என்றால் தாவாச்சொத்து குடியிருப்பு பகுதி என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் அருகில் குடியிருப்பு பகுதியே இல்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு தெற்கே வீடு உள்ளது. கலெக்டர் மீது போடப்பட்டுள்ள வழக்கில் இந்த வாதிகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. தாவாச்சொத்திற்கு கிழக்கே வசந்தா வீடு உள்ளதா என்றால் ஆமாம். தாவாச்சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு பாலாஜி பத்ரிநாத் என்பவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தபோது வீட்டுவரி போட்டோம் என சாட்சி கூறுகிறார். அந்த வீட்டு வரி ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தெரியாது. தற்போது நான் நிர்வாகத்தில் இல்லை. நிர்வாகத்தில் உள்ளவர்கள் சாட்சியமளிக்க வருவார்களா என்றால் ஆமாம். ஊராட்சி மன்ற தலைவராக இருந்த பாலாஜி பத்ரிநாத் என் கட்சிக்காரரர் என்பதால் வீட்டு வரி ரசீதை மோசடியாக போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. Plan approval, பஞ்சாயத்துபோர்டு அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு வீட்டுவரி ரசீது போடமுடியாது என்றால் சரியல்ல.

(5) பி.சா.ஆ.10 ல் உறவின்முறை வரவு செலவு கணக்கு நோட்டில் தீர்மானம் எதுவுமில்லை என்றால் சரிதான். மேற்படி வரவு செலவு தணிக்கை செய்யப்பட்டதா என்றால் இல்லை. பி.சா.ஆ.10 மற்றும் பி.சா.ஆ.11 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச்சொத்து பந்தல்குடி லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்குசெட்டியார்கள் உறவின்முறையை சேர்ந்த விவசாய மக்களின் களம் என்றால் சரியல்ல. அந்த களத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அப்புறப்படுத்தப்பட வேண்டியது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபின்னர் தான் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டது என்றாலும், வழக்கு தாக்கல் செய்தபோது குழிகள் மட்டுமே தோண்டப்பட்டது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.8,9 ல் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.8,9 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பணம் கொடுத்தவர்களுக்கு ரசீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். சி.அ.ராமசாமி என்பவர் தாவாச்சொத்தின் கிழக்கு கடைசியில் சொத்து இருப்பதாக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் அந்த வழக்கு எண்.264/2015 என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதால்

பி.சா.ஆ.12,13 இறுதியானது அல்ல என்றால் சரியல்ல. கந்தசாமி செட்டியார் யார் என்றால் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.264/2015 வழக்கை தாக்கல் செய்த நபர் ஆவார். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அதன்மேல் மேல்முறையீடு உள்ளது என்றால் சரிதான்.

(6) வழக்கு தாக்கல் செய்தபிறகு பி.சா.ஆ.6 எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பாகவே எடுக்கப்பட்டது என சாட்சி கூறுகிறார். புகைப்படங்களில் தேதி உள்ளதா என்றால் இல்லை. போட்டோ எடுத்தவரிடம் ரசீது வாங்கினோமா என்றால் இல்லை. வழக்குதாக்கல் செய்தபோது வா.சா.ஆ.9 ல் உள்ளதுபோல்தான் தாவாச்சொத்து இருந்தது என்றால் சரிதான். வழக்குதாக்கல் செய்தபிறகு தான் கட்டிடத்தை கட்டினோம் என்றால் ஒப்புதல் பெற்றுதான் கட்டினோம் என சாட்சி கூறுகிறார். அதனால் வாதிகளுக்கு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை களமாக மட்டும்தான் பயன்படுத்த முடியும் வேறு உபயோகித்திற்கு பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.19 17:13:04 +0530